[திரு. ஆர். பஞ்சாட்சரம்] [1989 ஏப்ரல் 4

குறித்த காலத்தில் மின் கட்டணம் செலுத்த முடியாமல் போனால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, மீண்டும் பணம் கட்டும்போது அபராதத் தொகை 30 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. திராவிடமுன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் இந்தத் தொகை ஐந்து ரூபாய் என்ற அளவில் இருந்தது. ஆகவே, கழக ஆட்சியில் இருந்ததைப் போல அபராதத் தொகை ரூபாய் ஐந்தாகக் குறைக்கப்பட வேண்டும். 1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் கவர்னர் ஆட்சிக் காலத்தில் உயர்த்தப்பட்டது, தற்போது 1-3-1989-லிருந்து அமல்படுத்தப்பட்டு ரூபாய் 30 வீதம் வசூல் செய்யவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்திற்கு தற்போது அளிக்கப்படுகிற மின்சாரம் பற்றாக்குறையாக உள்ளது. பகலில் 6 மணி நேரம், இரவில் 8 மணி நேரம் மின்சாரம் தொடர்ந்து கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்று விவசாயிகளுடைய குறைகள் நிறைய இருக்கின்றன. எனக்கு அளிக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டதால் இத்துடன் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஏ) பேரவையில் பெண் போலீசாரைப் பணியில் அமர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. ா. அப்துல் சமத்: துணைத் தலைவர் அவர்களே, ஐந்து பெண் போலீசாரை இங்கே சபையிலே பணியில் அமர்த்தினால் நலமாக இருக்குமென கருதுகிறேன். காரணம், இன்றைய நிலையே நாளையும் ஏற்பட்டால், செல்வி ஜெயலலிதா அவர்கள் இந்தச் சபைக்கு வந்தால், ஒரு ஆண் போலீசை வைத்து வெளியேற்றினார்கள், கையைப் பிடித்து இழுத்தார்கள் என்றுகூட அவர்கள் பிரச்சாரம் செய்ய நேரிடலாம். எனவே, தயவுசெய்து ஐந்து பெண் போலீசாரை நியமிக்க வேண்டுமென்ற யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர்கள் சபைக்கு வருவதில்லையென்று தெரிவித்து விட்டார்கள். ஆகவே, பெண் காவலர்கள் தேவையில்லை.

*திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறையில் நேரிடையாக ஈடுபட்டிருக்கிற காரணத்தால், வேளாண்மைத் துறையில் கிடைத்திருக்கிற அனுபவங்களை வைத்து மானிய கோரிக்கைகளை இங்கே முன்மொழிந்து இருக்கிறார்கள். இந்த மானிய கோரிக்கையில் 13 தலைப்புகளில் 83 உட்பிரிவுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. 31 புதிய செயல்பாடு திட்டங்கள் அறிவிக்கப்